# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 199/மா/2019
ஆணை நாள்: 28.1.2020

திரு. A. மனோகரன்,
திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாநகராட்சி, ரவுண்டு ரோடு, புதூர், ரயில்வே காலனிரோடு, எண்.86/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. மனோகரன் என்பவரது முறையீட்டு மனு 22.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண். 199/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

முறையீட்டு மனுதாரர் திரு. A. மனோகரன் என்பவர் தனது முறையீட்டு மனுவில் தான் திண்டுக்கல் மாநகராட்சியில் பதிவுரு எழுத்தராக பணிபுரிந்து 31.12.2016 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், தனது சேமநல நிதி கணக்கில் இருந்த தொகைக்கு 1.1.2001 முதல் 31.12.2016 வரையிலான காலத்திற்கு வட்டித் தொகை வழங்கவேண்டும் என்றும், கோரியுள்ளார்.

முறையீட்டு மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 02.12.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. அதன்படி, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் 17.12.2019 நாளிட்ட அறிக்கையில் திண்டுக்கல் மாநகராட்சியின் 1985-86 முதல் 1999-2000 முடிய சேமநல நிதி கருவூல இருப்பிற்கு வட்டித் தொகை வழங்கிடக்கோரி கோப்பு எண். 12762/92/பி6 வாயலாக இயக்குனர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டு வட்டித்தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், இறுதியாக இயக்குனர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 46657/பபா-2/2000 நாள் 21.2.2001-ன்படி 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளுக்கு ரூ.82,511/- வட்டித்தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி 31.12.2016-ல் ஓய்வு பெற்ற திரு. ஆ. மனோகரன்

பதிவுரு உதவியாளருக்கு 1999-2000 முடிய உள்ள காலத்திற்கான சேமநலத்தொகை ரூ.11,475/-ஐ தனியரின் கார்பரேஷன் வங்கி கணக்கு எண். 01700101020146-ல் 2.3.2017 அன்று வரவு வைக்கப்பட்டுள்ளது என்றும், மாநகராட்சியின் கடிதம் ந.க.எண். 9653/2002/பி6 நாள் 19.04.2007 மற்றும் கடிதம் ந.க.எண். 4836/2013/பி6 நாள் 12.4.2017 மற்றும் 10.6.2019 தேதியிட்ட கடிதங்கள் வாயலாக 2000-2001 முதல் 2015-2016 முடிய உள்ள காலங்களுக்கான சேமநல நிதி வட்டித்தொகை அனுமதிக்கக்கோரி இயக்குனர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை அவர்களுக்கு உதவி இயக்குனர், உடனிதழ் தணிக்கை வாயலாக முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, உதவி இயக்குனர், மாநகராட்சி தணிக்கை திண்டுக்கல் 05.09.2017 தேதியக் கடிதத்தில் முன்மொழிவுகளில் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு கருத்துரு திருப்பப்பட்டுள்ளது என்றும், சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சரிசெய்து மீளசமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்றும் சேமநல நிதித் தொகைக்கான உரிய தணிக்கைச்சான்று / வட்டித்தொகை அனுமதிக்கப்பட்டவுடன், சேமநல நிதி வட்டித்தொகை விரைவில் வழங்கப்படும் என்ற விபரம் மனுதாரருக்கும், ஓய்வு பெற்ற இதர பணியாளர்களுக்கும் பலமுறை நேரில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், தெரிவித்துள்ளார்.

மேலும் தனது அறிக்கையில் மாநகராட்சியின் நிதி நிலைமை தற்போது மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளதால் 2015 முதல் ஓய்வுபெற்ற / பணியிடை காலஞ்சென்ற பணியாளர்களுக்கு பணப்பலன்கள் வழங்கப்படாமலும், பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒப்படைப்பு விடுப்பூதியம் / ஊதிய உயர்வு நிலுவைத் தொகை / சேமநலநிதி கடன் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள நிலையில் மீள சமர்ப்பிக்கப்படவுள்ள மேற்படி வட்டித் தொகை கருத்துருவின் மீது இயக்குனர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை அவர்களால் சேமநல நிதிக்கான வட்டித்தொகை அனுமதிக்கப்பட்டு தொகை பெறப்பட்டால் மட்டுமே வழங்க இயலும் என்றும், இம்மாநகராட்சியின் நிதிபற்றாக்குறை மற்றும் நிர்வாக காரணங்களால் மட்டுமே மனுதாரருக்கு வட்டித்தொகை வழங்கிட காலதாமதம் ஏற்பட்டு வருகிறதென்றும், மேற்படி குறைபாடுகள் சரிசெய்து தனியருக்கும் ஓய்வுபெற்ற இதர பணியாளர்களுக்கும் வரிசைக் கிரமமாக (Based on seniority) வட்டித்தொகை வழங்கப்பட்டு விடும் என்ற விபரத்தினை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 9.12.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 21.1.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தான் திண்டுக்கல் மாநகராட்சியில் பதிவு உதவியாளராக பணிபுரிந்து 31.12.2016-ல் ஓய்வு பெற்றுவிட்டதாகவும், தனக்கு திண்டுக்கல் மாநகராட்சி எழுதிய கடிதத்தில், சேமநல நிதி வட்டித் தொகை ரூ.11,475/- Corporation வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும், மற்ற தனது கோரிக்கைகள் குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றும், மாநகராட்சியில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளில் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு கருத்துரு திரும்ப பெறப்பட்டது என்றும், விரைவில் சரிசெய்யப்பட்டு உரிய தணிக்கை சான்றுபெற்று வட்டித் தொகை விரைவில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் தனக்கு வழங்கப்படவேண்டிய சேமநல நிதி வட்டித் தொகையினை விரைந்து கிடைப்பதற்கு ஆவண செய்யுமாறு தெரிவித்தார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மற்றும் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. திண்டுக்கல் மாகராட்சியின் சேமநல நிதி கணக்கின் கருவூல இருப்பின் மீதான வட்டி தொகை வழங்குவதற்காக உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குனர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவுகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை சரிசெய்து மீள சமர்ப்பித்து உரிய வட்டித்தொயினை பெற விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்குரிய சேமநலநிதி வட்டித் தொகையினை வழங்கிட மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

உதவிப்பதிவாளர்.

பெறுநர்:

1) திரு. A. மனோகரன்,
பதிவுரு எழுத்தர் (ஓய்வு),
86/1, ரயில்வே காலனி ரோடு,
ரவுண்டு ரோடு, புதூர்,
திண்டுக்கல் – 624 005.

2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்